08.10.2025

O.S.No.496/2012

வா.சா.2.திரு. கோடிஸ்வரன், த.பெ.ராமநாதன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் இட விற்பனை தரகராக இருந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இந்த வழக்கின் வாதி ஆறுமுகம் தான் என்னை சாட்சியம் சொல்ல அழைத்து வந்தார் என்றால் ஆமாம். வாதி ஆறுமுகம் எனக்கு உறவினரா என்றால் பழக்கம். எனக்கும், வாதி ஆறுமுகம் என்பவருக்கும் 10, 15 ஆண்டு பழக்கம் உள்ளது. இந்த வழக்கில் யார் வாதி, யார் பிரதிவாதி என்ற விவரம் எனக்கு தெரியுமான என்றால் தெரியும். இந்த வழக்கு எந்த வருடம் தாக்கல் செய்தார் என்று தெரியுமா என்றால் 2012ம் வருடம் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு என்ன காரணத்திற்காக போடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். தற்போது, இந்த சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வாதி ஆறுமுகம் என்பவருக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து அங்கமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அங்கமுத்துவை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அங்கமுத்து தற்போது இறந்துவிட்டார். தாவா சொத்து விஸ்தீரணம் 10, 12 செண்டு இருக்குமா என்றால் 1, 1-1/2-செண்ட் இருக்கும்.

2. கிரைய ஒப்பந்தப்பத்திரத்தை யார் எழுதினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தப் பத்திரம் எந்த

தேதியில் எழுதப்பட்டது என்றால் 18.01.2008ம் தேதி எழுதப்பட்டுள்ளது. கிரைய ஒப்பந்தத்தில் என்ன வாசகங்கள் எழுதப்பட்டிருக்கிறது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்த ஆவணத்தில் யார், யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆறுமுகம் அவர்களை அழைத்து வந்தார். நான் அங்கமுத்து சார்பாக தான் சென்றேன். காலநீட்டிப்பு பத்திரம் எந்த வருடம் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும். நான் கிரைய ஒப்பந்தத்திலும், கால நீட்டிப்பு ஒப்பந்த பத்திரத்திலும் நான் சாட்சிக் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். கால நீட்டிப்பு பத்திரத்தில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சகாயம் என்ற ஜான் மற்றும் ரவி ஆகியோர்கள் கையெழுத்து போட்டார்கள். சகாயம் என்ற ஜான் மற்றும் ரவி ஆகியோர்களை எனக்கு தெரியாது. மேற்படி, நபர்களை நான் சாட்சி கையொப்பம் போட்டபின்பு நான் பார்க்கவில்லை.

3. வாதிக்கு அசல் ஆவணங்கள் கொடுக்கப்பட்டதாக நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது எந்தெந்த ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட அன்று அங்கமுத்து பத்திரங்களை எல்லாம் கொடுத்தார். தாவா சொத்து விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், வாதி ஆறுமுகம் எனது உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(6ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(திரு.பொ.மகாராஜன்.,M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.